We Shine Academy™
guiding you to get through

## Act - 7 / சட்டம் - 7

| Right to Information Act, 2005 [RTI] | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 |
|---|---|
| RTI is an integral part of the freedom of speech and expression enshrined in Article 19 (1) (a) of the Constitution. | தகவல் பெறும் உரிமை சட்டமானது அரசமைப்புச் சட்டத்தில் ஷரத்து 19 (1) (a)-வில் கூறப்பட்டுள்ள கருத்து சுதந்திரத்தின் ஓர் அங்கம். |
| The expression in Article 19 (1) (a) has been held to include the right to acquire information and disseminate the same. | கருத்து சுதந்திரம் என்பது தகவல்களை பெறவும், அத்தகவலை பரப்பவும் உரிமை அளிக்கின்றது. |
| In order to promote transparency and accountability in administration, parliament passed RTI act | நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வரவும் அதனை மேம்படுத்தவும் நாடாளுமன்றத்தால் இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. |
| Salient Features : | சிறப்பியல்புகள் : |
| i) Only citizens can apply for information. | i) குடிமக்களால் மட்டுமே தகவலை பெற முடியும். |
| ii) All Public Authorities are answerable under the Act. | ii) அனைத்து அரசு அதிகாரிகள் இச்சட்டத்தின் கீழ் பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள். |
| iii) Applicant need not provide reasons. | iii) கேள்வி கேட்போர் காரணம் சொல்லத் தேவையில்லை. |
| iv) Applicant can obtain information within 30 days. In specific circumstance information can be obtained within 48 hours. | iv) கேள்விகளுக்கான பதில் 30 நாட்களுக்குள் தரப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் 48 மணிநேரத்திற்குள் தரப்பட வேண்டும். |
| Two tier mechanism for appeal.<br>1. State Information Commission<br>2. Central Information Commission | மேல்முறையீடு இரண்டடுக்கு முறையை கொண்டது.<br>1. மாநில தகவல் ஆணையம்<br>2. மத்திய தகவல் ஆணையம் |

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

| General Information | பொதுத் தகவல் |
|---|---|
| First RTI law was enacted by Sweden in 1766. | முதன் முதலாக RTI சட்டம் 1766-ல் சுவீடனில் இயற்றப்பட்டது. |
| First state enacted RTI law was Tamil Nadu – 1997 | இந்தியாவில் 1997-ம் ஆண்டு தமிழ்நாட்டில் முதன்முதலாக RTI போன்றதொரு சட்டம் இயற்றப்பட்டது. |
| Related International Convention:<br>(i) Universal Declaration of Human Rights, 1948.<br>(ii) International Covenant on Civil and Political Rights, 1966. | இச்சட்டம் சார்ந்த சர்வதேச ஒப்பந்தம்<br>(i) மனித உரிமை சாசனம், 1948.<br>(ii) உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம், 1966. |
| Freedom of Information Act, 2002 was replaced by RTI Act, 2005. | சுதந்திர தகவல் சட்டம், 2002-யை மாற்றி RTI 2005 கொண்டு வரப்பட்டது. |
| RTI Act, 2005 conflict with Official Secrets Act of 1889. | RTI சட்டமானது அலுவலக இரகசியச்சட்டம் 1889-வுடன் முரண்படுகின்றது. |

## Scheme – 7 திட்டம் - 7

| **Green Climate Fund** | **பசுமை பருவநிலை நிதியம்** |
|---|---|
| a financial mechanism under the United Nations Framework Convention on Climate Change (UNFCCC) | இது, ஐ.நா. பருவநிலை மாற்றத்திற்கான அமைப்பின் கீழ் செயல்படும் நிதியாகும் |
| It was set up by 194 countries that are part of UNFCCC, at the Conference of parties (Cop – 16) in Cancun in 2010. | இந்நிதியம் 194 நாடுகளால் அமைக்கப்பட்டது. அந்நாடுகள் UNFCCC-ன் உறுப்பு நாடுகள் ஆகும். 2010-ல் நடைபெற்ற கங்கன் பருவநிலை மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. |
| The funds come mainly from developed countries, but also from some developing countries, regions and one city (paris) | இந்நிதியானது வளர்ந்த நாடுகளிடமிருந்தும் குறிப்பிட்ட சில வளரும் நாடுகளிடமிருந்தும் பெறப்படுகிறது. மேலும் ஒரு நகரம் (பாரிஸ்) நிதி அளிக்கின்றது. |

| | |
|---|---|
| It focuses on investing in low emission and climate resilient development projects. | இந்நிதியை பருவநிலை மாற்றத் திட்டங்கள் மற்றும் மாசு குறைப்பு திட்டங்களுக்கு முதலீடு செய்யப்படுகின்றது. |
| As per the international agreement, advanced economies should provide an annual assistance of 100 billion USD, through public and private sources, by 2020 – the deadline is now extended to 2025. | இச்சர்வதேச கட்டுப்பாட்டின்படி வளர்ந்த பொருளாதார நாடுகள் ஆண்டுக்கு மொத்தமாக 100 பில்லியன் டாலர் கொடுக்க வேண்டும். 2020-க்குள் கொடுக்க வேண்டும். |

We Shine Academy™